1990 மார்ச் 30] [திரு. கே. ஏ. செங்கோட்டையன்]

ஆலைகளை மூடிவைத்துக் கொண்டிருக்கிறார்கள். அரிசி அங்கே சந்தைகளுக்குக் கிடைப்பது இல்லை. ஆகவே, உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன் அவர்கள் எழுப்பிய பிரச்சினை குறித்து நேற்றையதினம் சட்டப் பேரவை உறுப்பினர்களான திரு. கணேசமூர்த்தி, திரு. கோவை இராமநாதன் ஆகியவர்கள் இது குறித்து பேசியிருக்கிறார்கள். அங்கேயுள்ள மொத்த வியாபாரிகளுக்கு சம்பா சீசனுக்காக 15,000 டன் லெவி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. 15—3—1990 வரையிலும் அவர்கள் கொடுத்திருக்கின்ற லெவியின் அளவு 4,100 டன் ஆகும். எனவே எஞ்சியிருக்கின்ற சம்பா சீசன் முடிய இருக்கின்ற காரணத்தாலே அதிகாரிகள் விரைந்து லெவியை வசூலிக்க வேண்டுமென்கின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதற்கு எதிராக ஆலைத் தொழிலதிபர்கள் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இது தொடர்பாக ஆலை தொழிலதிபர்களுக்கு தகவல் கொடுத்து நிலைமை எவ்வாறு இருந்தாலும் கூட, நேரடியாக இங்கே வந்தால் பேசி முடித்து வைக்கிறேன் என்ற தகவல் அனுப்பி அவர்களும் வர இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து அவர்கள் ஆலைகளை மூடிவிட்ட காரணத்தாலே சந்தைக்கு அரிசி வரவில்லை, விலைவாசி ஏறியிருக்கிறது என்ற கூற்று தவறானதாகும். விலைவாசியைக் கட்டுப்படுத்துகின்ற வகையில் பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக அரிசி நிரம்ப ஏற்கெனவே வைக்கப்பட்டிருக்கிறது. அத்தோடு 'ஓப்பன் மார்க்கெட்'—வெளிச் சந்தை விலைக்கு கொடுப்பதற்கும் எல்லா கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அங்கே பொது மக்களுக்கு வழக்கம்போல் அரிசி உரிய விலையில், வெளிச் சந்தை விலையில் கிடைப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இருந்தாலும் விரைந்து பேசி சுமூகமாக இந்தப் பிரச்சினையை தீர்த்துக் கொள்வதற்கு அரசு விரும்புகிறது. இது பொது விநியோகத் திட்டம் என்கின்ற காரணத்தாலே மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(ஆ) திருச்சி வட்டாரப் பொறியியல் கல்லூரியில் பகுதி நேரப் பொறியியல் பட்டப்படிப்பு நிறுத்தப்படுவது குறித்து.

திருமதி பாப்பா உமாநாத்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி ரீஜினல் இன்சினியரிங் கல்லூரியில் இதுவரை நடத்தப்பட்டு வந்த பகுதி நேர பி.இ. பட்டப்படிப்பை நிறுத்து

வது என்று அந்தக் கல்லூரித் துறைத் தலைவர்கள் முடிவு செயதுள்ளனர். அதையொட்டி இந்த ஆண்டு மாணவர்கள் தேர்வு செய்வதை கல்லூரி முதல்வரும் தன்னிச்சையாக நிறுத்தியுள்ளார். இந்தப் பகுதி நேர பட்டப்படிப்பு என்பது மிகவும் அவசியமாக, தேவையானதாக இருக்கிறது. படிக்கமுடியாதவர்கள் வேலை செய்துகொண்டே பட்டப்படிப்பை தொடர்வதற்காக இதைப் பயன்படுத்துகிறார்கள். பட்டப் படிப்பு நிறுத்தப்பட்டதை ஆட்சேபித்து இந்த வட்டாரம் முழுவதும் பல்வேறு மக்கள் பகுதியினர் பாய்லர் ஆலைத் தொழிலாளிகள் அமைப்புகள், அரசியல் கட்சிகள் கடும் ஆட்சேபம் தெரிவித்து பல இயக்கங்கங்கள் நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். எனவே எக்காரணம் கொண்டும் பகுதி நேர பட்டப் படிப்பை நிறுத்தக் கூடாது. இதற்கு கல்லூரி போர்டு அனுமதியை, சேர்மன் என்ற முறையில் நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அளிக்காமல் அந்த பகுதிநேர பி.இ. பட்டப்படிப்பை நடத்துவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

10-10 மணி

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியிலே உள்ள வட்டாரப் பொறியியல் கல்லூரி ஒரு தனி அமைப்பாக இயங்கி வருகிறது. சில சிறப்புக் கூறுகள் அந்தக் கல்லூரியிலே அமையவேண்டும் என்னும் நோக்குடன் மத்திய அரசினுடைய சார்பிலே உள்ள பிரதிநிதிகளும் மாநில அரசின் சார்பிலே உள்ளவர்களுமாக அமைந்த ஆட்சிக் குழு மூலம் நீண்ட காலமாக அப்படி ஒரு நோக்கத்தோடு இயங்கி வருவது. எனினும் அவர்களுக்குச் சில இடையூறுகள் இருக்கின்றன, இந்த பார்ட்-டைம் வகுப்பு நடத்துவதில். இருந்தாலும் அடுத்த பத்து நாட்களில் நடைபெறக் கூடிய அந்த வட்டாரப் பொறியியல் கல்லூரியினுடைய ஆட்சிக்குழு இந்தப் பிரச்சினை குறித்து விரிவாக ஆலோசித்து தகுந்த முடிவு எடுக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

(இ) நாகப்பட்டிணத்திலிருந்து படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற சிலர் இலங்கைக்குக் கொண்டு போகப்பட்டுள்ளதால் அவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் குறித்து.

திரு. கோ. வீரையன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நாகையின் அருகில் உள்ள அக்கரப்பேட்டை, கீத்தாங்குப்பம், கல்லலாறு பகுதியைச் சார்ந்த மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்றபோது 65 மீனவர்கள் கடத்திச் செல்லப்பட்ட விவரங்களை இங்கே எழுப்பியபோது முதலமைச்சர் அவர்கள் துரிதமாக அதிலே கவனித்து கண்டு பிடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்தார்கள். அந்த முறையிலே அரசு துறையிலே துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு 58 படகுகள் கிடைத்திருப்பதாகவும் அதிலே 311 பேர்கள் இருப்பதாகவும்